பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 15 | 29-06-94 | புதன்கிழமை | ஓசை 131

## யாழ். பல்கலை விஞ்ஞானபீடம் சில ஆண்டுகளில் மூடப்படலாம்

யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பிரிவு இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள் மூடப்பட்டுவிடும் என தான் நம்புவதாக பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் கவலை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விளக்குகையில், கடந்த மூன்று ஆண்டு காலத்திற்குள் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து வருகின்றது. நூறு மாணவர்கள் வரை பயிலக்கூடிய பிரிவிற்கு 85 மாணவர் (5 ஆம் பக்கம் பார்க்க)

### கலந்துரையாடல்

நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம் பெறவுள்ள விசேட கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் ப. நோ. கூ. சங்கங்களின் நெறியாளர் சபை உறுப்பினர்கள், தலைவர், பொது முகாமையாளர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

# பொதுத் தேர்தலில் தோல்வியுற்றால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடேன்

## அதி அற்புத தியாகிகளான கரும்புலிகளை பூசிப்போம்

### யாழ். மாவட்ட அரசியற்துறையினர் அறிக்கை

'வரைபடாத சித்திரங்களாயும், எழுதப்படாத சரித்திரங்களாயும் எமது வாழ்வுக்காக தமதுவாழ்வைத் துறந்த கரும்புலிகளான அதி அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்திப் பூசிப்போம்! அவர்தம் தியாகங்களைப் போற்றுவோம்!' என ஜூலை5 கரும்புலிகள் நாளை முன்னிட்டு யாழ் மாவட்ட அரசியற் துறையினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ் அறிக்கையின் விபரம் வருமாறு;

கரும்புலிகள் நாள் - கரும்புலி கப்டன் மில்லர் எமது விடுதலைப் போராட்டத்தில் எதிரியின் அசைக்க முடியாத கோட்டையாக விளங்கிய ஓர் இராணுவ முகாமைத் தனித்து ஒருவனாகச் சென்று தகர்த்தெறிந்து ஒரு பெரிய படை அணியாலும் செய்ய முடியாத ஓர் ஒப்பற்ற அற்புதமான இராணுவ சாதனையை முதன் முதலில் நிலைநாட்டிய நாள் ஜூலை 05, 1987. அந்த ஜூலை 05ம் நாளே கரும்புலிகள் நாள்.

வருகின்ற அந்த ஜூலை 05ம் நாளின் போது எமது விடுதலைப் போராட்டத்தில் உச்சமான அர்ப்பணிப்பும். ஈகமும் (தியாகமும்) நிறைந்ததும், போராட்டம் இக்கட்டான கட்டத்தில் இருந்த வேளைகளில், எமது மக்களைப் பெருமளவில் அழித்தொழிக்கும் நோக்கத்தோடு எமது மண்ணைக் கபளீகரம் செய்ப எதிர்முற்பட்டுநின்ற, நிற்கும், காலங்களில் எமது மக்கள் எமது கடற்பரப்பில் தமது சீவியத் தொழிலைச் செய்யவிடாது இடர் விளைத்தும், கொன்று குவித்தும் எமது தமிழீழ மண்ணில் எமதுமக்கள் போக்குவரத்துச் (5ஆம் பக்கம் பார்க்க)

## நண்பர்களிடம் டி. பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**பொதுத் தேர்தலில் ஐ. தே. க. தோல்வியுற்றால் அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் நிற்கப் போவதில்லை என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தனது நெருங்கிய நண்பர்களுக்கு கூறியதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.**

பொதுத் தேர்தலில் ஐ.தே க. தோல்வியுற்றால் ஜனாதிபதித் தேர்தலில் ஐ தே.க வின் பிரதித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே நிறுத்தப்படலாம் எனக் கூறப்படுகின்றது. எனினும் இது குறித்து ரணில் சம்மதிப்பாரா என்பது குறித்து இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேசமயம் பாராளு மன்றப் பொதுத் தேர்தலை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா ஒரு பரிசோதனைக்களமாகவே கருதுவதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

பொதுத் தேர்தலில் ஐ.தே. கட்சி தோல்வியடையும் பட்சத்தில், ஜனாதிபதித் தேர்தலில் ஐ தே.க வின் வெற்றிவாய்ப்பென்பது மிகவும் குறுகிவிடும் என்பதே பலரது கருத்தாகும். இந் நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைப் பொறுப்பேற்க ஐ.தே. கட்சியில் உள்ள முக்கிய பிரமுகர்கள் எவரும் முன்வர தயக்கம் காட்டுவார்கள் என்றே கூறப்படுகின்றது- இவ்வாறு தேர்தலில் பங்குபற்றுவதென்பது அரசியற் தற்கொலைக்கு ஒப்பானது என்றும் கூறப்படுகின்றது-



### தேசிய பட்டியலில் அனுரா?

(கொழும்பு)

அடுத்த பாராளுமன்றத்திற்கு தர்மை ஐ தே. க தேசியப் பட்டியல் எம். பிகளாக நியமிக்குமாறு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் சரத் அமுனுகம. ஜனாதிபதி ஆலோசகர் விக்ரமவீரசூரிய ஆகியோர் கேட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## பொதுத் தேர்தலில் போட்டியிட படை அதிகாரிகள் பலர் விருப்பம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்த...

கள் இருவரும் தம்மிடம் இது ... சிலரும் பொது ஜன ஐக்கிய ...

## பாரிய ராணுவ நடவடிக்கை

## பாரிய இராணுவ நடவடிக்கை தற்போதைக்கு இல்லை

### உயர்மட்ட மாநாட்டில் கொள்கையளவில் தீர்மானம்

(கொழும்பு)

வ பகுதிமீது தற்போதைக்கு பாரிய அளவிலான இராணுவ நடவடிக்கை எதனையும் மேற்கொள்வதில்லை என பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றஉயர்மட்ட மாநாடொன்றில் கொள்கை அளவில் தீர்மானம் எடுத்திருப்பதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவிக்கிறது.

எனினும் புலிகளின் ஊடுருவலைத் தடுக்கவும் இராணுவ பலத்தை ஸ்திரமாக வைத்துக்கொள்வதற்கும் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை ஆங்காங்கே மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

கடந்தவாரம் இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்றபத்திரிகையாளர்மாநாடொன்றில். வடபகுதி யுத்த நிலைமை பற்றி நிருபர் ஒருவர் கேட்ட கேள்வியொன்றுக்கு, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டிசில்வா யுத்தத்தைப் பற்றி பின்பு சிந்திப்போம் எனக் கூறினார்.

தொடர்ந்து இராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, நிருபர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் எமது இராணுவத்தினரால் ஒரே இரவில் யுத்தத்தில் வெல்ல முடியாது, எது எப்படியிருப்பினும் இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே உகந்தது என பொருள்படப் பதிலளித்தார்.

## இராணுவ நடவடிக்கை ஒத்திவைப்பால் படை உயர் பீடத்தில் தளர்வு நிலை

(கொழும்பு)

வடபகுதி மீது பாரிய இராணுவ நடவடிக்கைக்கு திட்டமிடப்பட்டிருந்தும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா அனுமதி வழங்க தயங்கியமை இராணுவ உயர் பீடத்தில் தளர்வு நிலையை ஏற்படுத்தியுள்ளதாக இராணுவ ஆய்வாளர்கள் கருத்துதெரிவித்துள்ளனர்.

வடபகுதியில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர் இதற்கு முன்னர் இவ்வளவு பெருந்தொகை இராணுவத்தினர் நிறுத்தி வைக்கப்படவில்லை என்பதையும், பாரிய நடவடிக்கைக்கான ஆரம்பமாக, ஆயிரம் கோடி ரூபாவிற்கு மேல் பெறுமதியான யுத்த டாங்கிகள், பீரங்கிப் படகுகள், விமானங்கள், கனரக ஆயுதங்கள், வாகனங்கள் வாங்கப்பட்டும், இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட சம்மதம் அளிக்கப்படாதது இத்தளர்வு நிலை ஏற்பட காரணமாகியிருப்பதாக அவ்வாய்வாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## ரோந்து சென்ற விமானப்படை மீது திருகோணமலையில் தாக்குதல்

### ஒரு விமானப்படை பலி; ஆயுதங்கள் மீட்பு

திருகோணமலையில் ரோந்து சென்ற விமானப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் விமானப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்;

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7.20 மணியளவில் கன்னியாவிற்கும் வில்கம் விகாரைக்குமிடையே வைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலின்போது அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

★ ரி-81 ரக துப்பாக்கி - 01
★ ரவைக்கூடுகள் - 08
★ கோள்சர் - 01
★ ஜே.ஆர்.கைக்குண்டு - 02
★ நடுத்தர ரவைகள் - 262
★ வோக்கி - 01
★ றொட் - 01

கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

(5ஆம் பக்கம் பார்க்க)

## சிறிமானி போட்டி

(கொழும்பு)

சிறிமானி அத்துலத்முதலி பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட திட்டமிடுவதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக அவர் சந்திரிகாகுமாரணதுங்கவுடன் பேச்சு நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## தென்மாகாண முதல்வர் போட்டி

(மாத்தறை)

தென் மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட உட்பட நான்குஅமைச்சர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் தெற்கில் போட்டியிட முடிவு செய்திருப்பதாக தெரியவருகிறது.

(5ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமாவிற்கு 5000 சிலை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் 5000 உருவச்சிலைகள் நாடுமுழுவதும் நிறுவப்படும் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அவர் தெரிவித்தார்,

முன்னதாக சிறிலங்கா அரசாங்கத்தால் கொழும்பில் நிறுவப்பட்டசிலை தனது தந்

(5ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்குமாறு பலபாதுகாப்புப் படை அதிகாரிகளும் அரசாங்க உயர் அதிகாரிகளும் ஐக்கிய தேசியக் கட்சியையும் பொதுஜன ஐக்கிய முன்னணியையும் கேட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் எதிர்வரும்தேர்தலில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் தாம் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளதாக இரு கட்சிகளினதும் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னணி வர்த்தகர்கள் இருவரும் இராணுவ அதிகாரிகள் இருவரும் தம்மிடம் இது குறித்து விண்ணப்பித்திருப்பதாக ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னணிசட்டத்தரணிகள் சிலரும் பொலிஸ் அதிகாரிகள் சிலரும் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட விண்ணப்பித்திருப்பதாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் தி. மு. ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில்

## மாவட்டத்தை தெரிவதில் அநுரா, ரணிலுக்கு சிக்கல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும், உயர் கல்வி அமைச்சர் அநுராபண்டார நாயக்காவுக்கும் தாம் தேர்தலில் போட்டியிடுவதற் ஒரு மாவட்டத்தைத் தெரிவு செய்வதில் பெரும் தர்மசங்கட நிலையை எதிர்நோக்குவதாக ''ராவய'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அநுராபண்டார நாயக்கா, ரணில் விக்கிரம சிங்கா ஆகி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில் 30 வீதமானோர் புதிய முகங்கள்

### பத்து அமைச்சர்களுக்கு இடமில்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் முப்பது சதவீதம் புது முகங்களாக இருக்க வேண்டும் என ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா விடுத்த பணிப்பை அடுத்து சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்முறை வேட்பாளர் பட்டியலில் இடம்பெற மாட்டார்கள் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் மேற்படி பணிப்புரையைத் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் முப்பது சதவீதமான வேட்பாளர்கள் புதிய முகங்களாக இருப்பர் என அதன் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர தெரிவித்தார்,

இந்நடவடிக்கையினால் ஐ. தே. கவைச் சேர்ந்த பத்துக்கு மேற்பட்ட அமைச்சர்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பதிவு செய்யாத மாணவர் வெற்றிடங்களை நிரப்புக

### பல்கலை. துணைவேந்தர் கோரிக்கை

(அலுவலக நிருபர்

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வியாண்டு 1993/94ற்கு தமது பெயர்களை பதிவு செய்யாத மாணவர்களின் வெற்றிடங்களை நிரப்புமாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினைக் கேட்டுள்ளார்.

மேற்படி கல்வியாண்டுக்கு தெரிவான மாணவர்கள் தமது பெயர்களை பதிவு செய்வதற்கென வழங்கப்பட்ட இறுதித்தினம் முடிவுற்ற போதிலும் இதுவரை பலர் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## நயினாதீவுதேருக்குசென்று திரும்பியவர்கள்மீது சூடு

### ஒருவர் பலி; 8 பேர் காயம்

நயினாதீவு நாகபூஷணி அம்மன் தேர்த் திருவிழாவுக்குச் சென்று திரும்பிய மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதால் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 8 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

நெடுந்தீவிலிருந்து புதன்

( 5ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

## SLEAS

அதிபர், SLEAS பரீட்சைகளுக்குரிய நுண்ணறிவு, கிரகித்தல், பொதுவிவேகப் பயிற்சிகள், ஆய்ந்தறிதல் திறன், கிரகித்தல் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. -கலாநிதி க. குணராசா. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (8617)

## 'அக்கரைச் சீமையில்' நாவல்

யாழ்ப்பாண நூலகத்தை சிங்களக் காடையர் எரித்த கதையை வாசியுங்கள். இலங்கையிலும் இங்கிலாந்திலும் நடக்கும் கதை. 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை சுவையாகச் சொல்கிறார். பூபாலசிங்கம் புத்தகசாலை. (8669)

## வெளிவந்துவிட்டது

அ. பொ. செல்லையா எழுதிய 'கல்விபற்றிச் சிந்திப்போம் செயற்படுவோம்' அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு மிகவும் பயனுடைய நூல். விலை 25/- (8658)

## திருத்திக் கொடுக்கப்படும்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும் உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். சகலவிதமான மணிக்கூட்டு பற்றரிகளும், உதிரிப்பாகங்களும் விற்கப்படும். கஜன்ஸ் வாச்வேக்ஸ் '12 புகையிரத நிலைய வீதி' சுன்னாகம் சந்திக்கருகாமையில். (8670)

## வியாபாரிகட்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள் லேஸ், நூல் வகைகள், எவர் சில்வர், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை மொத்தமாக பெற்றுக்கொள்ள ஜெயா அழகு மாடம் 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-9900)

## வெள்ளி விழா

யாழ் கத்தோலிக்க திருச்சபையில் கடந்த 25 வருடங்களாக மறை பணியாற்றி தற்போது கிளிநொச்சி மறைகோட்டத்தில் பணியைத் தொடரும் மறையாசிரியர் ச. அரோக்கியநாதரின்

# ஐ.தே.க. கூட்டத்தை அலுவிகார பகிஷ்கரிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தளை மாவட்ட சம்மேளனத்தின் கூட்டத்தை அமைச்சர் அலுத் அலுவிகார பகிஷ்கரித்தார். மாத்தளை மாவட்ட அமைப்பாளர் பதவியிலிருந்து இவர், நீக்கப்பட்டதே இப் பகிஷ்கரிப்புக்கு காரணம் என சொல்லப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தளை மாவட்ட சம்மேளனத்தின் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நகரமண்டபத்தில் நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளர் காமினி விஜேசேகராவும் இதில் கலந்து கொண்டார். மாத்தளை மாவட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நகர, பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட 132 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் நூறிற்கும் குறைவானவர்களே சமுகமளித்திருந்தனர்,

கடந்த பல வருடங்களாக மாத்தளை மாவட்ட ஐ.தே. கட்சியின் பிரதான அமைப்பாளராக கடமையாற்றிய அமைச்சர் அலுத்அலுவிகார உட்பட பலர் இக் கூட்டத்திற்கு சமுகமளிக்கவில்லை.

இந்த பகிஷ்கரிப்பு தொடர்பாக மாத்தளை மாகாண சபை உறுப்பினரும் மாத்தளை பிரதேச ஐ. தே. க. உபதலைவருமான வி. பி. அத்துலத் கருத்துத் தெரிவிக்கையில் ஐ. தே. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான அமைச்சர் அலுவிகாரவை பிரதம அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு புதிய அமைப்பாளராக மற்றுமொருவரை நியமிப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்தே தாம் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றார்.

இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவிற்கும் ஐ. தே. கட்சித் தலைமையகத்திற்கும் தாம் அறிவித்திருப்பதாகவும் அமைச்சர் அலுவிகாரவை புறக்கணித்து விட்டு ஐ. தே. கட்சியால் மேற்கொள்ளப் படும் எந்த விதமான நடவடிக்கைக்கும் தான் ஆதரவளிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

# தென்மராட்சியில் கரும்புலி தின ஏற்பாடுகள்

(தென்மராட்சி)

எதிர்வரும் யூலை 5 கரும்புலி நாளை முன்னிட்டு தென்மராட்சிப் பகுதி எங்கும் துரித சிரமதான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. முகாம்களில் சிரமதானங்களும் இடம் பெற்று வருவதோடு கரும்புலிகளின் நினைவுருவப் படங்கள் புதிதாக பல இடங்களில் வைப்பதற்கான ஏற்பாடுகளும் முக்கிய இடங்களில் கரும்புலிகளின் தியாகத்தினை சித்திரிக்கும் வளைவுகளும் கட்டப்பட்டு வருகின்றன. பொதுஸ்தாபனங்கள், பொது மக்கள், மாணவர்கள் அனைவரும் இதில் மும்முரமாக ஈடுபட்டுவருவதை அவதானிக்க முடிகின்றது. கொடிகாமம், பளை, சாவகச்சேரி, கைதடி போன்ற வட்டவை ரீதியாக இவ் ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. (86)

# பயிலுநர் பயிற்சிக் காலம் ஒருவருடம் மட்டுமே

(நல்லூர்)

01-07-1993 ஆம் திகதி தொடக்கம் அரசாங்க நிறுவனங்களில் நியமிக்கப்பட்டுக் கடமை புரியும் பயிலுநர்களின் பயிற்சிக்காலம் ஒரு வருடத்துக்கு மேல் நீடிக்கக் கூடாது. இதே போல் இனி வரும் காலங்களில் அரச சேவைக்கு நியமிக்கப்படும் பயிலுநர்களின் பயிற்சிக் காலமும் ஒருவருடத்துக்கு மேல் நீடிக்கக்கூடாது என அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை

... திணைக்களத் தலைவர்களுக்கும் பணித்துள்ளார். (17)

## வருடாந்த விளையாட்டுப்போட்டி

மூளாய் மாதர் சங்க சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கிராமியப் பொறுப்பாளர் திரு. கிரன்

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள

# 37 மாணவர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் கண்பார்வையற்ற மாணவர்கள் என அடையாளம் காணப்பட்ட வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற சுமார் 37 மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரினால் நேற்றுக்காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடாத்தப்பட்ட வைபவமொன்றில் வைத்து இவை மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

மேலும் ஒரு தொகுதி கண்பார்வையற்ற வறிய மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாக வைத்தியகலாநிதி திரு. தெய்வேந்திரன் தெரிவித்தார். அவர்மேலும்தெரிவிக்கையில்;

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து பாடசாலை வைத்திய அதிகாரிகளினால் சிபார்சு செய்யப்பட்ட வறிய மாணவர்களுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன என தெரிவித்தார். (பா)

## பயிற்சிக் கருத்தரங்கு

கடந்தமாதம் ஒட்டிசுட்டான்வட்டத்தில்புளியங்குளம் பகுதியில் விவசாயப் பயிற்சிக் கருத்தரங்கொன்றை தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தினர் விவசாய போதனாசிரியர்களின் உதவியுடன் நடத்தினர்.

இக் கருத்தரங்கில்சிறுபோக பயிர்ச்செய்கையில் விவசாயிகள் எதிர்நோக்கும்பிரச்சினைகள்பற்றியும் அதைத் தீர்ப்பதற்கானவழிமுறைகள் பற்றியும் ஆராயப்பட்டதுடன், கமஇரசாயனங்களை எவ்வாறு தேவைஅறிந்து மட்டுப்படுத்தி உபயோகிப்பது இவ் இரசாயனப்பாவனையால் சூழலுக்கு ஏற்படும்தாக்கம் களைநாசினிகள், கிருமி நாசினிகள், பங்கசுநாசினிகள் என்பவற்றை எவ்வாறுவிசுறுவது என்பதுபற்றியும்செய்முறைவிளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இத்துடன் தென்னை நாற்றுநெரிதல், நாற்றுமேடை அமைத்தல் பற்றியும் எரிபந்தம் கபிலநிறத்தத்தி, உவர் மூலம் பயிர் எரித்தல் போன்ற நோய்களைஎவ்வாறு இனங்கண்டு கட்டுப்படுத்தலாம்எனவிளக்கம்அளிக்கப்பட்டதுடன் பயிலுநர்களின்சந்தேகங்களும் தீர்த்துவைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

முறைச்சாரக் கல்விப்பிரிவில் பயின்று வெளியேறிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் யூலை மாதம் நடைபெறவுள்ளது

எனவே முறைசாராப் பிரிவில் பயின்று வெளியேறிய மாணவர்கள் தாம் பயின்ற பாடசாலை அதிபருடாக அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அதிபரிடம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

UNIVERSITY OF JAFFNA - SHRI LANKA

EXTERNAL EXAMINATION 1992/93 :-

GENERAL DEGREE ARTS - PART I AND II
SPECIAL DEGREE ARTS - PART I AND II
BACHELOR OF COMMERCE
DEGREE PART I AND II

Examination Entry forms will be received

## நினைவு கூருகின்றோம்... 29-06-1994

1984-ம் ஆண்டு இதேதினத்தில் சரவணையில் சிறிலங்கா காவல்துறையினருடன் ஏற்பட்ட சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஸ்ரீபன்** (நடராசா ஆனந்தராஜா-அனலைதீவு-யாழ்)

1989-ம் ஆண்டு மணலாறு நாயாற்றுப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.குமரன்** (முருகுப்பிள்ளை சம்பந்தர்-சிவன்கோயிலடி-திருமலை)

**நிசாம்** (யோகநாதசாமி தமிழ்ச்செல்வன் - கட்டைபறிச்சான், மூதூர்-திருமலை)

**மேஜர் ரஞ்சன்** (இராசதுரை சுரேஸ்-பன்னாலை, தெல்லிப்பழை-யாழ்)

மயிலிட்டியில் தேசவிரோதசக்திகளினால் சித்திரவதைசெய்யப்பட்டு வெட்டிக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**செல்லம் அக்கா** (லலிதாங்கி செந்தில்வேல்-நாவலடி ஒழுங்கை-வல்வெட்டித்துறை)

1990-ம் ஆண்டு சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த,

**மங்களா** (பொ. சசிக்குமார்-வவுனியா)

மன்னார் மறிச்சுக்கட்டியில் எம்து மிதிவெடியில் சிக்கி சிகிச்சைக்காக யாழ் கொண்டு செல்லும்போது வீரச்சாவெய்திய,

**2-ம்லெப்.பாண்டியன்** (திரவியம் வீரசிங்கம் (எட்வின்) பெரியகடை-மன்னார்)

அம்பாறை-அறுகம்பை முகாமில்வைத்து சிறிலங்காப்படையினரால் ரயர்போட்டு எரித்துக்கொல்லப்பட்ட பொத்துவில் உல்லையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டு-கல்லடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின்னர் திரையரங்கு ஒன்றினுள் இருந்து கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட நாவலடியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

மணலாறு-கொக்கிளாய், செம்மலை-நாயாறுப் பகுதிகளில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்

யாழ்-பலாலி கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்,

1992-ம் ஆண்டு மட்டு-மகிளூர் முனைத்துறையில் பதுங்கியிருந்த சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**மதிவதனன்-மணிவதனன்** (கதிரையா மணிவண்ணன்-கோட்டைக்கல்லாறு-மட்டு)

**நாவேந்திரன்** (கந்தவனம் மகேந்திரராஜா-கோட்டைக்கல்லாறு-மட்டு)

**வர்ணன்-அபூர்வராஜன்** (நல்லதம்பி இராஜேந்திரன்-கல்லாறு-மட்டு)

கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைதாக்குதலில் வீரச்சாவெய்திய,

ஈழநாத நிர்வாகப்பொறுப்பாளரான,

**மேஜர் அழகன்** (செல்வராசா இளங்கோ-கல்வயல் சாவகச்சேரி - யாழ்)

**சேரன்** (சிவஞானம் அன்ரனிசில்- முள்ளியான், கட்டைக்காடு-யாழ்)

**சிற்றம்பலம்-சபேசன்** (புலேந்திரன் அன்ரன் அஜதாஸ்-நெடுந்தீவு - யாழ்)

சாவகச்சேரி - சங்கத்தானை பகுதியில் விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட பொலிஸ் ஊழியரான பொதுமகன்.

1993-ம் ஆண்டு கிளாலிக் கடற்பரப்பில் மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

தற்போது ... கோட்டத்தில் பணியை தொடரும் மறையாசிரியர் ச. ஆரோக்கியநாதரின் வெள்ளிவிழா நிகழ்வுகள் கிளிநொச்சியில் எதிர்வரும் வியாழன், வெள்ளி நாட்களில் நடைபெறும்.

...மும் ஒருவருடத்துக்கு மேல் நீடிக்கக்கூடாது என அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளர் வை. பீ. புஸ்ஸெதெனிய சகல

சாலையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கிராமியப் பொறுப்பாளர் திரு.கீரன் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றது.


அழகிற்கு மெருகூட்டும்

பெயர் மாற்றம்

## ஜெயா அழகு மாடம்

இடமாற்றம்

ஜெயா பென்ஸி ஹவுஸ்
160, நவீன சந்தை

ரேகா பென்ஸி ஹவுஸ்
25, 48, பெரியகடை

மக்களின் வசதிகருதி மேற்படி இரு நிறுவனங்களும் ஒரே இடத்தில்

## ஜெயா அழகு மாடம்

177A, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

- ★ அழகுசாதன அன்பளிப்புப் பொருள்கள்
- ★ மணிக்கூட்டு வகைகள்
- ★ கிளாஸ் செற், கண்ணாடி பாத்திர வகைகள்
- ★ இமிற்றேசன் பொருள்கள்
- ★ நூல், லேஸ் வகைகள்
- ★ பிளாஸ்ரிக் வகைகள்

மணமகளுக்குரிய அரங்கேற்ற கலை நிகழ்வுகளுக்கான சோடனை வகைகள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

# ஜெயா அழகு மாடம்

177A, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9899)


DEGREE PART I AND II

Examination Entry forms will be received from registered candidates, who wish to sit the above examination scheduled to commence in September/October 1994.

Examination Entry forms could be obtained from the External Examinations and Registration University of Jaffna in person or by post from 01 - 7 - 1994.

Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Manager People's Bank located in the University of Jaffna for the payment of Rs. 15/-Those who wish to obtain the forms by post are required to send a money order/postal order for 15/- drawn in favour of Bursar, University of Jaffna together with a self addressed envelop affixing stamp to the value of Rs. 12/-.

Completed Examination Entry forms should be submitted to the External Examinations and Registration unit on or before 30th July 1994.

Registrar,
University of Jaffna. (சி-9896)


# மொழிபெயர்ப்பாளர் தேவை

இலத்திரனியல் (Electronic), கணனி (Computer), பௌதிகவியல் (Physics) ஆகிய துறைகளில் ஆங்கிலத்தில் உள்ள புத்தகத்தை தமிழில் மொழி பெயர்ப்பு செய்வதற்கு நன்கு அனுபவமுள்ள மொழி பெயர்ப்பாளர் உடன் தேவை. சம்பளம் மாதம் 4000/-க்கு மேல் வழங்கப்படும். நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ உங்கள் தகைமைகளைக்குறித்து 05-07-94க்கு முன் விண்ணப்பிக்கவும்.

குறிப்பு:- முழுநேரமாக, அல்லது பகுதிநேரமாக, வேலை செய்வதற்கு விருப்பமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களிற்கு

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லிவீதி, (றெயில்வேகடவையருகாமை)
யாழ்ப்பாணம்.

(8675)


லங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

மேஜர் அழகன்-தாகூர் (மார்க்கண்டு உத்தமசீலன் - நாகர்கோயில் வடக்கு - வடமராட்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-9893)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



# அழகண்ணா!

தேச விடுதலைத்தீயில் வெந்தவனே -என்
தேகம் எரியுதடா உன் நினைவினிலே
அழகா! அன்பையளித்த அண்ணா! - உன்
அழகான முகந்தெரியுதடா தினங்கனவாய்?

பாசவிதை விதைத்தாய் - ஏனடா?
பழகிய பாதியிலே பிரிவதற்கா?
எனைச் 'சாந்தி'என செல்லமாக அழைப்பாயே
என் மனம் சாந்தமடையுதில்லை

உன் நினைவாலே.
(சி-9897) - சி. சாந்தகுமார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# அம்பாறை பஸ்நிலையத்தில் தமிழ் பயணிகளுக்கு தடை

கிழக்கில் தமிழ் பிரதேசங்களுக்குச் செல்லும் பஸ்வண்டிகள் எதுவும் அம்பாறை பஸ் நிலையத்தினுள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

1990ஆம் ஆண்டிலிருந்து இந்நிலை தொடருவதாகவும் தமிழ்ப் பிரதேசங்களுக்குச் செல்லும் பயணிகள் பஸ்நிலையத்துக்கு வெளியிலுள்ள ஓரிடத்தில் நின்றே பஸ்ஸில் ஏறுவதாகவும் கூறப்படுகிறது.

இதற்கு 1990ஆம் ஆண்டு அம்பாறை பஸ் நிலையத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு காரணமாக கூறப்படுகிறதாம்.

# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே அவசியம்

## சந்திரிகா குமாரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு பிரச்சினைக்கு விரைவான ஒரு தீர்வு ஏற்படுத்தவேண்டும் இதற்கென தற்போது பேச்சுகள் நடைபெறுகிறது பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதே அவசியம் என சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவி சந்திரிகா குமாரணதுங்க லங்காதீபவிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு விரைந்த தீர்வு உள்ளதா என கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

வடக்கு கிழக்கு தேர்தல் தொடர்பாக தமிழ் முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சு நடைபெறுவதாகவும் தற்போது இவர்களுடன் கூட்டு ஒப்பந்தம் ஒன்றை காணக்கூடிய நிலை ஒன்று ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### சிராவஸ்தி விடுதியில்

# இன்னும் 3 மாதங்களுக்கே எம்.பிகள் தங்க அனுமதி

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதால் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிராவஸ்தி உட்பட ஏனைய தங்கும் இடங்களில் அவர்கள் மேலும் மூன்று மாதங்களுக்கு மட்டுமே தங்க முடியுமென பாராளுமன்ற செயலாளர் தெரிவித்துள்ளார்

பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்ற பதவியை இழநதால் இவ்வாறு ஒழுங்குகள் செய்யப்படுவதில்லை என்றாலும் இது விசேட நடவடிக்கையாக கருதப்படும் என தெரிவித்துள்ளார்.

### தடுப்புக் காவலில் உள்ளோர் மீது

# விசாரணையை துரிதமாக்க பொலிஸ்மா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

அவசர கால சட்டத்தின் கீழ் தடுப்பு காவலில் உள்ள சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை தொடர்ந்து நெருக்கடிகளில் சம்பந்தப்பட்டவர்களை தடுத்துவைக்க பொலிஸாரை தயார்படுத்தும் நோக்குடன் இவ்விசேட பணிப்பு வழங்கப்பட்டு இருப்பதாக தெரியவருகின்றது.

# விறகுக்கு சென்ற பெண் பாம்புக்கடியில் மரணம்

(தொல்புரம்)

திருவடி நிலை புளியந்

லடியைச் சேர்ந்த நான்குபிள்ளைகளின் தாயான மாரியப்பிள்ளை நேசம்மா (வயது48)

## பரிசளிப்புவிழா

(பருத்தித்துறை)

புலோலி வாணர் குடியிருப்பு இளைஞர் சன சமூக நிலைய கலாசார பிரிவான சாந்திநிகேசன் கலாமன்றத்தின் பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் மன்றத்தலைவி திருமதி பூ. தர்மபாலசிங்கம் தலைமையில் வீரபத்திரர் ஆலய முன்றலில் அமைக்கப்பட்டமேடையில் நடைபெற்றது. இவ்விழாவிலே பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் திரு. ச. செவ்வந்திநாதர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்கள், சான்றிதழ்களை வழங்கினார். (25)

## நிறுத்தல் அளவை முத்திரையிடல்

(கொழும்புத்துறை)

சங்கானை பிரதேச சபைச் செயலகத்தில் இன்றும் 30, 1, 4, 5, 7, 8ஆம் திகதிகளிலும் நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு மேற்படி திகதிகளில் தினமும் காலை 8 30 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை முத்திரையிடும் வேலை நடைபெறும். (24)

## சாரணர் பாசறை

அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் புதிய சாரணர் குழு அண்மையில் தனது சாரணர் பாசறையினை நடாத்திவைத்தது.

பகலும் இரவுமாக நடாத்தி முடிக்கப்பட்ட இப் பாசறை நிகழ்ச்சியை சாரணர் பொறுப்பாசிரியர்களான திரு என். சண்முகரட்ணம், திரு. இ. சந்திரராஜ் ஆகியோர் நெறிப்படுத்தினர். சுமார் ஐம்பது சாரணர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியை யாழ்ப்பாணக் கல்வி வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் பார்வையிட்டு பாராட்டினார்.

இந்நிகழ்வின் முன் இக்கல்லூரி மாணவிகளின் அமைப்பான பெண் சாரணர்களும் முழுநாள் பயிற்சிப் பாசறை ஒன்றினை நடாத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## நிபந்தனை

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு கூடிய ஆதரவை அளிக்கும் கட்சிக்கே இம்முறை பாராளுமன்ற தேர்தலில் ஒத்துழைப்பு வழங்குவதாக அதன் தலைவரும் வடமேல் மாகாண சபை முதல் அமைச்சருமான ஜீ. எம். பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

இதற்கான கட்சியின்

சுருக்கெழுத்துத் தட்டெழுத்து (தமிழ்)
குடிசார் எந்திரவியல் - மூன்று வருடம்
படம்வரை பயிலுனர் - ஒருவருடம்

மேற்படி பயிற்சி நெறிகளைக் கற்று முடித்தவர்களும், வேறு திணைக்களங்களில் செய்முறைப் பயிற்சியை முடித்தவர்களும், தொடர்ந்தும் செய்முறைப் பயிற்சியைப் பெறவிரும்பின் உடனே எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொழிநுட்பக் கல்லூரி
யாழ்ப்பாணம்.
1994-06-27

க. ஜெயரெட்ணம்
அதிபர்

(சி-9889)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ் கோட்டம்


★ முக்கிய அறிவித்தல் ★

சகல பொதுச் சபை உறுப்பினர்களுக்குமான பொதுச் சபைக் கூட்டம் 29.06.94 புதன் கிழமை மாலை 4.00 மணிக்கு புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் (எழிலகம் முன்பாக) நடைபெறவுள்ளது. புதிய விதிமுறைகள் தொடர்பான விடயங்கள் ஆராயப் படவுள்ளதனால் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
யாழ் கோட்டம்

(சி- 9892)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
10.08.1932

விண்ணில்
09.07.1993

திதி 29.06.1994

அமரர்

### வேலாயுதம் நாகலிங்கம் அவர்கள்

(பிரபல வர்த்தகர், சங்கானை)

அன்புத் தந்தையே! பாசத்தின் உறைவிடமாய்
எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே
ஆண்டொன்று உருண்டோடிய பொழுதிலும்
இனிமையான பசுமை நினைவுகள்
என்றென்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் நினைவில் நிறையும்

இடமாற்றம்

வட மாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம் 1-07-1994 முதல் பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கு மாற்றப் செய்யப்பட்டுள்ளது. இதை சகல சங்க அங்கத்தவர்கட்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்,

மு.சி. சண்முகராசா
செயலாளர்

பாண்டியன்தாழ்வு,
கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9898)

## இளங் கலைஞர் மன்ற

### மாதாந்த இசை நிகழ்ச்சி

ஆதரவு: ஈழநாதம் மக்கள்தினசரி நிறுவனம்
இடம்: மன்றக் கலாமண்டபம்,
சட்டநாதர்வீதி, நல்லூர்
காலம்: 30 6-1994 வியாழன் மாலை5மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை

5-00 - 5-20 பாட்டு
அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற மாணவிகள்
செல்விகள் : க. ஸ்ரீதேவி, செ. அனுசியா, சி. வினோதினி, நா. சசிகலா, ந. ஸ்ரீரஜனி, ஆ. சுபாஷினி, த. அன்பரசி, ஆ. சிவகௌரி, சி. சிவரஞ்சனி, ப பகீரதி.
செல்வி ஞானேஸ்வரி பரமு - வயலின்
செல்வன் க. மயூரன் - மிருதங்கம்

5-20 - 5-50 வயலினிசை
செல்வி சந்தானலக்ஷ்மி அப்பாத்துரை - வயலின்
திருமதி கானகோகிலம் ஜெயம்-மிருதங்கம்

5-50 - 6-30 வீணையிசை
திருமதி மலர்விழி கனகசபை-வீணை
திரு. எஸ். கண்ணதாசன் - மிருதங்கம்
திரு. சி. சிவசிவா - கடம்

6-30 - 7-30 இசைக்கச்சேரி
செல்வி வி. விமலாதேவி - பாட்டு
திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
திரு. கே. கண்ணதாசன் - மிருதங்கம்
எம். கஜன் - கடம்

7-30 - 8-00 மங்கள விளக்கேற்றல்
திரு. க. முருகதாஸ் அவர்கள்
பொது முகாமையாளர் ''ஈழநாதம்''
திரு. சு. பாஸ்கரன் அவர்கள் (ஸ்தபதியார்)

தலைமையுரை:- இரா. செல்வவடிவேல் ஆசிரியர் அவர்கள்

பிரதம விருந்தினர் உரை:- வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் அவர்கள் (சுகாதார வைத்திய அதிகாரி யாழ். மாநகராட்சி மன்றம்)
வைத்தியகலாநிதி திருமதி செங்கமலம் தெய்வேந்திரம் அவர்கள் (யாழ்போதனா வைத்தியசாலை)

8-00 - 9-00 சிறப்பு நிகழ்ச்சி

★ பரதநாட்டியம்
நாட்டியக்கலைமணி
செல்வி இராஜாம்பிகை நடராஜா அவர்கள்
நட்டுவாங்கம்:- நாட்டியக்கலைமணி
திருமதி பத்மரஞ்சனி -உமாசங்கர்
பாட்டு:- இசைக்கலைமணி
திரு. வர்ண இராமேஸ்வரன்
வயலின் :- இசைக்கலைமணி
திரு எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்:- சங்கீதரத்தினம்
திரு. எஸ். மகேந்திரன்
புல்லாங்குழல்:- ப்ரம்மஸ்ரீ ம. தாணுநாதசர்மா

திருவடிநிலை புளியந் துறைப் பகுதியில் விறகு சேக ரிக்கச் சென்ற பெண் ஒருவர் பாம்பு தீண்டியதால் மரண மானார்.

சுழிபுரம் மேற்கு இராத்த

ளைகளின் தாயான மாரியப் பிள்ளை நேசம்மா (வயது48) என்பவரே கடந்த வியாழன் அன்று பாம்பினால் கடியுண்டு பரிதாபகரமாக மரணத்தை தழுவிக் கொண்டவராவார்.

(41,

துள்ளார்.

இதற்கான கட்சியின் பொதுக் கூட்டத்தை அடுத்த வாரம் கூட இருப்பதாகவும் இதற்கு நாடு முழுவதிலும் இருந்து தமது அங்கத்தவர் களை வரவழைக்க இருப்ப தாகவும் தெரிவித்தார்.


உங்கள் நினைவில் நிறையும்
அன்பு மனைவி பிள்ளைகள்
தாய் தந்தையர், மருமக்கள்
ஆஸ்பத்திரி வீதி, பேரமக்கள், உற்றார்.
சங்கானை (8676) உறவினர்கள்



திரு: எஸ். மகேந்திரன்
புல்லாங்குழல்:- ப்ரம்மஸ்ரீ ம. தாணுநாதசர்மா

கலா ரஸிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

20-6-94 (இ) மேற்படி மன்றத்தினர்


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



முன்னாள் ஈழநாதம் நிர்வாகப் பொறுப்பாளர்

### மேஜர் அழகன்

(செல்வராசா இளங்கோ)


தாயின் மடியில் 13-01-1966 | வீரச்சாவு 29-06-1992

அழகு மொழி பேசி எம்மோடு
அணைத்திருந்த அழகன் அவன் - எம்
விழியில் நீர்பெருகி உடல் நனைக்க
விட்டுச் சென்று இப்போ
ஆண்டுகள் இரண்டு அதற்குள் போயிற்றா
கண்ணில் வழிந்த நீர் காயவில்லை இன்னும்.

குளோபல் என்ஜினியரிங்
ரெக்னோலொஜி சேர்விஸஸ்
32, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

76, A. V றோட்:
கொழும்புத்துறை, (சி-9894)

## எமது இதய அஞ்சலிகள்!



### இரண்டாண்டு இன்று!!

தாயக விடியலின் தாகம் சுமந்து
ஓய்தல் இன்றி உழைத்த அழகன்
பாயும் புலியாகிப் படையில் நின்றவன்
பாடையில் ஊர்ந்து ஆண்டுகள் இரண்டா!
ஈழநாதத்தை இசைத்த இளவலின்
ஈகம் உரம் ஊட்ட
விழியில் வழியும் நீர் விரல் துடைக்க
விரைவோம் அவன் வழியே!

## மேஜர் அழகன்

(முன்னாள் ஈழநாதம் நிர்வாகப் பொறுப்பாளர்)

— ஈழநாதம் ஊழியர்கள்.

(இ)

# தேர்தல் வெற்றி குறித்து தலைவர்கள் நம்பிக்கை

(கொழும்பு)

தென்மாகாணசபை தேர்தலில் கிடைத்த வெற்றியை விட மிகக்கூடிய வெற்றிகளை எதிர்வரும் தேர்தல்களில் நாம் பெறுவோம் என சந்திரிகா குமாரணதுங்கா தனது கட்சி அமைப்பாளர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்.

யார் என்ன கூறினாலும் தேர்தலில் எமக்கே அமோக வெற்றி கிட்டும் என காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 13 - 01 - 1966

வீரச்சாவு 29 - 06 - 1992

முன்னாள் ஈழநாதம் நிர்வாகப் பொறுப்பாளர்

### மேஜர் அழகன்

நில்வுக்குப் பொருள் சொன்ன
அழகன் எனும் முழுநிலவே
நிலவு மறைந்தது போல் நீரும்
மறைந்தீரோ; நிலவு வருவது
போல் நீரும் வருவீரோ
வானத்தில் இல்லை; எங்கள் இதயத்தில்

மதி, மணி, சிவா, அசோக், சண்,
பிரபா, வதனா,

(சி-9888)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 12 - 12 - 1969

தாயக மண்ணில் 29 - 06 - 1992

ஜெயப்பூர் செயற்கைக்கால்

# பாவனையாளர்களிடையே போட்டி நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெயப்பூர் செயற்கைக்கால் நிறுவனம் தனது 7ஆம் ஆண்டு நிறைவையொட்டி பலசிறப்புப் போட்டிகளை நடாத்த விருக்கிறது.

இப்போட்டிகள் யாவும் ஜெயப்பூர் செயற்கைக் கால் பாவனையாளர்களுக் கிடையிலேயே நடாத்தப்பட விருக்கிறது. இதனால் செயற்கைக் கால் பாவனையாளர்களிடமிருந்து இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களை மேற்படி நிறுவனம் கோரியிருக்கிறது.

துரித நடைப்போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி, கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகிய போட்டிகள் உட்பட செயற்கை அவயவச் செயற்பாட்டுத்திறனை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளிலும் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுபவர்களுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக மேற்படி நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் இலக்கம் 5, பழைய பூங்கா வீதி சுண்டிக்குளியில் உள்ள மேற்படி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கூறப்பட்டது.

வெற்றிடமுள்ள பாடசாலைகளுக்கு

## அருகில் வசிப்போருக்கு ஆசிரியர் நியமனம்

அழகியற்கலை, விவசாயம், மனையியல், கணித / விஞ்ஞானம், தொழில் நுட்பப் பாடங்கள் ஆகிய வகைக்குரிய ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு வெற்றிடமுள்ள பாடசாலைகளுக்கே நியமனம் செய்யும் நடைமுறையைக் கொண்டு வருவதற்கு கல்விச் சேவைச் சபை திட்டமிட்டுள்ளதாக கல்விச் சேவைச் சபைச் செயலாளர் ஏ. எஸ். வீரரத்ன சகல கோட்டக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதன்படி மேற்கூறிய வகை ஆசிரியர்களுக்கு வெற்றிடமாக உள்ள பாடசாலைகளின் பெயர்ப்பட்டியல்களையும் எவ்வளவு வெற்றிடங்கள் தேவையாக உள்ளன, பாடசாலை அமைந்துள்ள கிராம சேவகர் பிரிவும் அதற்கு அருகாமையில் உள்ள கிராம சேவகர் பிரிவு போன்ற விபரங்களை உள்ளடக்கும் பட்டியல்களை உடனடியாக கல்விச் சேவைச் சபைக்கு அனுப்பி வைக்குமாறு சகல கோட்டங்களுக்கும் பொறுப் பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் அவர் பணித்துள்ளார். (17)


## சிறிசேன கூரே தேர்தலில் போட்டியிடமாட்டார்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் அமைச்சர் சிறிசேன கூரே போட்டியிடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது தாம் இம்முடிவுக்கு அண்மைக்காலத்தில் வரவில்லை எனவும் இனிமேல்தேர்தல்களில்போட்டியிடுவதில்லை என பிரேமதாசா காலத்திலேயே முடிவு எடுத்து விட்டதாகவும் சிறிசேனகூரே தெரிவித்தார்.

எனினும் தாம் எதிர்வரும் தேர்தலில் கொழும்புதொகுதியில் ஐ தே.கவின் வெற்றிக்காக உழைக்கப்போவதாகவும் கூரே கூறினார் இதேசமயம் சிறிசேனகூரே தமதுமுடிவை மாற்றி தேர்தலில் போட்டியிடுமாறுஜனாதிபதிவிஜேதுங்கா கோரிக்கை விடுத்துள்ளார்,

## 5-ம் ஆண்டு நினைவலைகள்



## இ.தொ. காவின் செயற்குழு கூடியது

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் அவசரசெயற்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் மாலை கண்டியில் நடைபெற்றது. அமைச்சரும் இ.தொ.கா தலைவருமான எஸ். தொண்டமானின் தலைமையில் நடைபெற்ற மேற்படி குழுக் கூட்டத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் இ. தொ. கா நடத்தும் முதலாவது சந்திப்பு என்பதும், இக் கூட்டத்தில் எதிர்வரும் தேர்தல்களில் இ. தொ.காவின் நிலைப்பாடு தொடர்பாக ஆராயப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வடபகுதி லொறியில் தடைசெய்யப்பட்ட பொருள்

வவுனியா ஈரற்பெரியகுளம் இராணுவத் தடை முகாமில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வடபகுதிக்கு செல்லவிருந்த லொறி ஒன்றிலிருந்து தடைசெய்யப்பட்ட பொருள்கள் பல கைப்பற்றப்பட்டுள்ளன என இராணுவத் தரப்பு கூறுகிறது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்க இது பற்றி நேற்றுமுன்தினம் கொழும்பில் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது; மேற்படி லொறியிலிருந்து 11,500 பென்டோர்ச்சுகளும், 400 டோர்ச் பற்றறிகள், 35 மோட்டார்சைக்கிள் பிஸ்டன்கள், 2லொறி றிம்கள் இருந்ததாக குறிப்பிட்டார்.

## சில அரசியல்வாதிகள் 7 கிரிமினல்களிற்கு உதவி

### சொத்தி உபாலிமீதானவிசாரணையில்அம்பலம்

(கொழும்பு)

பாதாள உலகத்தைச் சேர்ந்த 7 கிரிமினல்களின் பின்னணியில் அரசியல்வாதிகள் செயற்படுவதாக மூத்தபொலிஸ் அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார். இக் கிரிமினல்களுக்கு இந்த அரசியல்வாதிகளே புகலிடம் வழங்கியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சொத்தி உபாலி மீதான விசாரணையில் இருந்து இந்த அரசியல்வாதிகளின் பங்கு தெரியவந்துள்ளதாகவும் விரைவில் இவ்அரசியல் வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

## தேர்தல் பிரசாரத்திற்கு பல கோடி ரூபா பணம்

### ஆளும்கட்சி, எதிர்க்கட்சி நடவடிக்கை

(கொழும்பு)

ஆகஸ்ட்மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாக பிரசார நடவடிக்கையில் பல கோடிக்கணக்கான பணத்தை செலவிடுவதற்கு ஐக்கிய தேசிய கட்சி மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஐ.தே.க பிரசார செயலாளராக கொள்கை திட்டமிடல் அமைச்சின் செயலாளரான விக்கிரம வீரசூரியாவை பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதே சமயம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரத்திற்கு கேணல் அநுருத்த ரத்வத்த தலைமையிலான குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் தேர்தல் பிரசாரத்தின் போது ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் மேடைகளில் சினிமா நடிக நடிகையர்களை அழைக்கவும் இன்னிசை நிகழ்ச்சிகளை நடாத்தவும் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## இரண்டாம் ஆண்டு இதய அஞ்சலி

கட்டைக்காட்டு சிறிலங்கா
இராணுவத்துடனான மோதலில்
வீரச்சாவடைந்த

## வீரவேங்கை சேரன்

**(சிவஞானம் அன்ரனிசில்ஸ்)**

கட்டைக்காடு, முள்ளியான்

காளையவன் பிறந்துவிட்டான்
கட்டைக்காடு மண்தனிலே
கயவனைக் கதற வைக்க - போர்க்
களமதிலே குதித்துவிட்டான்

களமது கலங்கிடவே - சேரன்
கன்னமதில் சன்னம் பாய
கண்களையோ மூடிவிட்டு - மாவீரர்
கலையகமோ சென்றுவிட்டான்.

கலங்கிவிட்டோம் இங்கு நாம்
கதறிவிட்டோம் உன்னை எண்ணி
காலமது இரண்டாண்டாகியும் தமிழீழமதில் - உன்
காலடியோ கலையவில்லை
ஆத்மாவோ ஆறுதல் பெற
ஆராதனைகள் செய்திடுவோம் - அண்ணா.

**இவருடன் வீரச்சாவு அடைந்த ஏனைய மாவீரர்களையும் நினைவுகூருகின்றோம்.**

29 - 06 - 94 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வருகைதருமாறு அன்புடன் அழைக்கிறோம்.

உன்பிரிவால் வாடும்

குமரிநாடான் குடியிருப்பு,
செம்பியன்பற்று வடக்கு,
செம்பியன்பற்று. (8623)

**தாய், சகோதரி,**
**உற்றார், உறவினர்கள்,**
**நண்பர்கள்**



## மேஜர் ரஞ்சன்

இராசதுரை சுரேஷ் (கண்ணன்)

தாயின் மடியில்
**1968. 02. 27**


வீரச்சாவு
**1989. 06. 29**

செங்குருதியால் வன்னி மண் சிவக்கச்
செருக்களத்தே பகைவர் புறமுதுகிட்டோட
வெங்கொடிய அலம்பில் போர் முனையில் வென்ற
வீர விறல் வேங்கை **மேஜர் ரஞ்சன்** வாழ்க.

மேஜர் ரஞ்சன் கைத்தொழிலகம்
வட்டு. றோட்,
சித்தன்கேணி.

(8624)

அன்புள்ள
ஐயா, அம்மா, அக்கா,
அண்ணன்மார், அண்ணி,
அத்தான்மார், சிறியதாய்மார்,
மாமா, மாமிமார், மருமக்கள்.



## மேஜர் அழகன்

(செல்வராசா - இளங்கோ)

முன்னைநாள் ஈழநாதம் நிர்வாகப் பொறுப்பாளர்

தாயின் மடியில்:
**13 - 01 - 1966**

தாயக விடிவில்:
**29 - 06 - 1992**

அருமையாம் செயல்களையே அவசரமாய் செய்துவிட்டுப்
பெருமையாய்ச் சென்றுவிட்ட, பிரியமான எம் மகனே!
இருவருடங்கள் எப்படியோ உருண்டு விட்டன ஐயா,
கனிவுடன், உன் நினைவு அலையில் காலத்தைக் கழிக்கின்றோம் நாம்.

உனக்கும் உன்சக மாவீரர்கள் அனைவருக்கும் எம் இதய அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம். ஈழநாதம் தொடர்பான அனைவரையும், போராளிகளையும், அன்பர்களையும், நண்பர்களையும் உன் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**— குடும்பத்தினர்.**

இளங்கோ வீதி, கல்வயல்-சாவகச்சேரி. (இ)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு..**

சிறந்த நிலையிலும் அரசாங்கம் தவிர்க்க முடியாத தீமை - சீர்கெட்ட நிலையில் அது தாங்க முடியாத கேடு.
- தோமஸ் பெய்ன்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 29-06-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## காபந்து அமைச்சரவை

புதிதாகத் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றம் பதவிப் பிரமாணம் செய்யும் வரை, செயற்படவுள்ள காபந்து அமைச்சரவை தொடர்பாக எதிர்க்கட்சியினர்கூட்டாக முன்வைத்த யோசனைகள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவால் நிராகரிக்கப்பட்டுள்ளன. கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற சகல அமைச்சர்களும் காபந்து அமைச்சரவையில் இடம்பெறுவார்கள் என அவர் தெளிவாகவும், திட்டமாகவும் எதிரணியினரிடம் கூறிவிட்டார்.

ஐ.தே.கட்சி அமைச்சரவை 80 பேருக்கு மேற்பட்ட அமைச்சர்களைக் கொண்டிருந்தது. சிறிலங்காவில், இவ்வளவு தொகையில் அமைச்சர்கள்இருந்தது இதுவே முதற் தடவையாகும். சுருக்கமாகக் கூறுவதானால், ஐ.தே:கட்சி உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் ஏதோ ஒரு அமைச்சுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்களாகவே இருந்துள்ளனர்.

இந்நிலையிலேயே காபந்து அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பொதுவாகவே காபந்து அமைச்சரவையில் குறைந்தளவு அமைச்சர்கள் அங்கம் வகிப்பதே வழமையாகும். சில முக்கியமான அமைச்சர்களைத் தவிர மற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

சிறிலங்காவில், பொதுவாக இது கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஆயினும் இன்றைய நிலையில் 80க்கு மேற்பட்டவர்கள் அமைச்சரவையில் இருப்பதென்பது, எதிரணியினர் கூறும் குற்றச்சாட்டிற்கு வழிவகுக்க கூடியதே ஆகும். அதாவது அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதென்பது அரச வளங்களை அவர்கள்தமது தேர்தல் லாபத்திற்குப் பயன்படுத்துவார்கள் என்பதே ஆகும்.

சிறிலங்காவைப் பொறுத்தோ, அன்றி அநேக மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தோ, காபந்து அமைச்சரவையோ அன்றி ஆட்சியில் இருந்துவிட்டு தேர்தலை எதிர்நோக்கும் கட்சிகளோ அன்றி ஆட்சியில் இருந்துகொண்டு இடைத்தேர்தல்களை எதிர்நோக்கும் கட்சிகளோ அரச வளங்களை பயன்படுத்துதல் என்பது புதியதொன்றல்ல. இந்நிலையில் ஐ.தே.க. காபந்து அரசாங்கம் அரச வளங்களைப் பயன்படுத்துவதொன்

## பாகிஸ்தான் கிரிக்கட் அணி திட்டமிட்டபடி வரும்

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கான தேர்தல்அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தாலும்கூட திட்டமிட்டபடி பாகிஸ்தான் கிரிக்கட் அணியின் விஜயம் இடம்பெறும் என்று இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டு சபையின் தலைவரான காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் அவர் மேலும் தெரிவிக்கையில், பாகிஸ்தான் கிரிக்கட் அணி நாற்பது தினங்கள் வரை இலங்கையில் தங்கி பல்வேறு போட்டிகளில் பங்கு பற்றும் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் ஜூலை 21-ம் திகதி கொழும்புக்கு இவ் அணியினர் வந்து சேருவார்கள் என்றும் இங்கு நடைபெறவுள்ள போட்டிகளில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளும் பங்கு பற்றும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு

## எட்டுமணி நேரத்தில் தேர்தல் பிரசாரம் ஆரம்பம்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றம் கலைக்கப்பட்டு எட்டுமணி நேரத்துக்குள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கிரியெல்லதேர்தல்தொகுதியில் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.

பாராளுமன்ற கூட்டதொடர் கலைக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பிரசார நடவடிக்கையை எட்டுமணி நேரத்தில் இவர் ஆரம்பித்து வைத்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அவர் அங்கு உரையாற்றுகையில், 1931-ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இப் பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடையவில்லை இதே போன்று இத் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பிரசார கூட்டத்தில் தேர்தலில் எமது கட்சியைத் தோல்வியடையச் செய்ய முடியாது எனதெரிவித்தார்.

## பதுளை சு.கட்சி எம்.பி ஐ.தே.கவில் இணைவார்

(கொழும்பு)

பதுளை மாவட்ட சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் எட்வின் திலகரத்தினா விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியில் சேரவுள்ளார். ஜப்பானில் இருக்கும் இவர் விரைவில் நாடு திரும்புவார் என்றும், ஐ தே. கவில் இணைந்து கொள்வார் என்றும் ஐ தே.க. வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதேவேளை இவர்ஐ.தே.கவில் இணைய இருப்பது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க தென் மாகாண சபைத் தேர்தலின் போது கட்சிக்கு விசுவாசமாகப் பிரசாரம் செய்யாதது குறித்து கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களே தற்போது ஐ தே.கவில் சேர்ந்துள்ளார்கள் என்றார் இவர்கள் அனைவரும் அநுராவின் நண்பர்கள் என்றும் அவர் தெரிவித்தார். கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு கிடைக்காது என்ற நிலையே அவர்கள் ஐ.தே.கவில் இணைவதற்கு காரணம் எனவும் குறிப்பிட்டார்.

# சீதனப் பிரச்சினை கலாசார அழிவாகிறது

### சீதனஒழிப்பு கருத்தரங்கில் உரை

(தென்மராட்சி)

'தமிழீழத்திலே சீதனப்பிரச்சினை சமூகத்தில் வேரூன்றி நிற்கின்றது இதற்கு நாம் ஒரு நடவடிக்கை எடுக்காவிடின் பின்பு ஒரு பாரிய கலாசார சீர்கேட்டினை எமது மண்ணில் வாழ்கின்ற மக்கள் எதிர்நோக்க வேண்டி வரும்'

இவ்வாறு கிராமந்தோறும் இடம்பெற்றுவரும் சீதனஒழிப்புக்கருத்தரங்கில் கடந்த திங்கள் கொடிகாமம் கொயிலாமனை என்னும்பகுதியில்கொடிகாமம் மகளிர்வட்ட உதவிப் பொறுப்பாளர் செல்வி அமுதினிதலைமையில்இடம்பெற்ற சீதனக் கருத்தரங்கில் உரையாற்றிய மகளிர் அமைப்பு அரசியல்துறையைச் சேர்ந்த செல்வி அன்பரசி கூறினார்

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் இந்தியா, சீனா போன்ற நாடுகளில் தாய்மார்கள் வயிற்றிலே கருவுற்றதும் சோதித்து பெண் என்றால் உடனே கருவைச் சிதைக்கின்றார்கள், அல்லது பெண்குழந்தை பிறந்து விட்டதுஎன்றால் கொலை செய்கின்றார்கள் இவை அனைத்திற்கும் காரணம் சீதனம்தான் இது மட்டுமா? ஒரு பெண்ணை வீட்டார் தொடர்ந்து மேல்படிப்பு படிக்க விடுவதில்லை காரணம் ஒரு பெண் எவ்வளவு தூரம் படித்துபட்டம் பெறுகின்றாளோ அவ்வளவு பணம் சீதனமாக பெற்றோர் கொடுக்க வேண்டிய 'கட்டாயத்தினை எமது சமூகம் வளர்த்துள்ளது அத்தோடு ஒரு ஏழைக்குடும்பத்தில் ஓர் பெண் படித்து பட்டம் பெற்றால் அப்பெண் திருமணம் ஆகாமல்தான் இறுதியில் இருக்க வேண்டியுள்ளது காரணம் சீதனம் இலட்சக்கணக்கில், இப்படி பெண்கள் மிகவும் மோசமான நிலைக்கு சீதனத்தினால் சமூகத்தில் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது

திருமணம் என்பது 3 வகையாக இடம்பெறுகின்றது பேச்சுத்திருமணம், கலப்புத்திருமணம், காதல் திருமணம் இந்த பேச்சுத்திருமணம் மிகவும் இறுக்கமாக பேசப்பட்டு எத்தனையோ திருமணங்கள் மணவறைவரை சென்று சீதனத்தினால் குழம்பியிருக்கின்றது காதல் திருமணமும் முதலிலே பெண்ணை ஏற்றுக் கொண்டு விட்டு பின் கணவன் தனது மனைவியை துன்புறுத்தி பெற்றோரிடம் சீதனத்தை வேண்டி வா என்று விரட்டுவான் இந்தப் பெண் இரு இடங்களிலும் நின்று சஞ்சரிக்கின்றாள் இந்த வேளையில் தனது குழந்தையை நன்கு பராமரிக்கக் கூட முடியாமல் வேதனை அடைகிறாள்அதுமட்டுமல்லாமல் அவள் இறந்து போகக் கூடிய சந்தர்ப்பமும் உண்டு, இப்படியான வேளை குழந்தையை கொலை செய்யவும் முயற்சிக்கின்றாள் இது போன்ற சம்பவம் எமது மண்ணில் கண்முன்னே இடம்பெற்று வருவதை நாம் நன்கு அவதானிக்க முடிகின்றது இது சகலதிற்கும் எமது சீதனஒழிப்பு நடவடிக்கை முக்கியமாக அமையும்.

எமது போராட்டம் வீறுநடை போட்டு நடக்கின்ற வேளை தேச விடுதலையை வென்றெடுக்கின்ற வேளையில் சமூகத்தில் சமூகச் சீர்கேடுகள், களவு, ஊழல், இல்லாத ஒரு தேசமாக திகழ வேண்டும் இதில் எமது சீதன ஒழிப்பு முக்கிய பங்கு எமது கண் முன்னே நடுக்கடலில் தத்தளித்து நின்று நீந்த முடியாதவர்கள் போல் ஒவ்வொரு பெற்றோரும் பெண் பிள்ளைகளை வீட்டில் வைத்துக்கொண்டு தமது உடலை வாட்டி உழைக்கின்றார்கள் இப்பெண்களுக்காக பெண்கள் இப்படி எத்தனை காலம் அடிமையாக்கப்படவேண்டும்?

எனவே இச்சீதனத்தை ஒழிக்க அனைவரும் அணிதிரள வேண்டும் என்றார் இவரைத் தொடர்ந்து அரசியல்துறையைச்சேர்ந்த மோகன் அவர்களும் உரை நிகழ்த்தினார் 'சீதனப்பேய்'' என்னும் வீதி நாடகமும் குறும்படமும் காண்பிக்கப்பட்டது (86)

## கும்பாபிசேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை கலட்டி அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிசேகம் நாளை காலை 5.30 தொடக்கம் 6.30 மணிவரை நடைபெறவுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 06. 29**

**புதன் இரவு**

08. 01 - கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி
08. 10 -மேஜர் அழகன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''ஆதவனாய் ஒளிதந்த அழகன்''
08. 30 - செய்திகள்
08. 40 - கடற்புலி மேஜர் அழகன் | தா கூர் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - 'கடலில் காவியம் படைத்த கடற்புலி மேஜர் அழகன்.''

**1994. 06. 30**

**வியாழன் காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - விடுதலை கீதங்கள்
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

தேசியபட்டியல்

எனினும் லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் அழுனுகம தாம் தேசியப்பட்டியல் எம்.பியாக கட்சியால் நியமிக்கப்படாவிட்டால் கண்டித் தொகுதியில் போட்டியிடுவேன் எனக் கூறியுள்ளார்.

தென்மாகாண

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னைநாள் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ரிச்சார்ட் பத்திரான, பியசேன கமகே, றொயல் பத்மசிறி, காரியவாசம் ஆகியோரும் இம்

பதிவு

இதன்படி உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 30 பேரும் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் 48 பேரும் இதுவரை தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவில்லை. இவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பிக்

## என்மீது சுவரொட்டி மூலம் களங்கம் ஏற்படுத்த திட்டம்

-சந்திரிகா

(கொழும்பு)

தன் மீது களங்கம் ஏற்படுத்தும் வகையில் சில சுவ

பிரமுகர் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

கவோ அரசவளங்களை பயன்படுத்துதல் என்பது புதியதொன்றல்ல. இந்நிலையில் ஐ.தே.க. காபந்து அரசாங்கம் அரசவளங்களைப் பயன்படுத்துவதொன்றும் ஆச்சரியமானதோ அன்றிக் கண்டு கொள்ளக்கூடியதோ இல்லை.

ஆனால் எதிர்த்தரப்பினர் இன்று எழுப்பும் குரலுக்குக் காரணம் காபந்து அமைச்சிற்கு எதிரானதல்ல. பெருந்தொகையானோர் காபந்து அமைச்சர் என்ற ரீதியில் தேர்தல் லாபத்திற்காக அரச வளங்களைப் பயன்படுத்தப் போகின்றார்கள் என்பதே ஆகும். அதாவது ஐ.தே.கவில் தற்பொழுது பாராளுமன்ற உறுப்பினர்களாக் இருந்தவர்களில்சுமார் மூன்றில் இரண்டு பங்கினர் அமைச்சர்கள் என்ற ரீதியில் அரசு வளங்களைத் தேர்தலுக்குப் பயன்படுத்தவுள்ளனர் என்பதனாலேயே ஆகும்.

இது தொடர்பான எதிர்த்தரப்பினரின் எந்த முயற்சியும் பயன் அளிக்காது என்பதே யதார்த்த நிலையாகும். ஏனெனில் ஐ.தே.கட்சி கடந்த காலத்திலும் தமது தேர்தல் வெற்றிக்காக அரசாங்கத்தின் முழு வளத்தையும் பயன்படுத்தியே வந்தது என்பதே வரலாறாகும்.

இதேசமயம் ஐ.தே.க. தனியாக தேர்தலுக்காக மட்டும் அரச வளத்தைப் பயன்படுத்தியதாக இல்லை தமக்குப் பெரும் செல்வம் சேர்ப்பதற்கும், தமது ஆடம்பர வாழ்க்கையைநிறைவு செய்வதற்கும், தமது பிறந்த நாள் விழாக்களைக் கொண்டாடுவதற்குமெனக்கூட பல கோடி ரூபாக்களையே செலவு செய்துள்ளனர்.

அத்தோடு, ஜனாதிபதி டி.பி, விஜேதுங்கா ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தாமல் பாராளுமன்றத் தேர்தலை நடத்தத் தீர்மானித்தமைக்குக் கூட இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். பாராளுமன்றத் தேர்தல் முதலில் நடத்தப்படும் பட்சத்திலேயே காபந்து அரசாங்கம் என்ற ரீதியிலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற ரீதியிலும், அரச வளங்களை ஐ. தே. கவின் தேர்தல் நன்மைக்சாக முழுமையாகப் பயன்படுத்த முடியும். அவ்வாறு இல்லாது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று தோல்வி இட்டுமானால் பொதுத்தேர்தலில் எந்தவொரு அரச வளத்தினையும் ஐ. தே.க. பயன்படுத்த முடியாத நிலை ஒன்று உருவாகிவிடவும் கூடும்.

இந்நிலையில், காபந்து அமைச்சரவையில், அமைச்சர்களைக் குறையுங்கள், அரச வளங்களைப் பயன்படுத்தாதீர்கள் என்ற கோரிக்கைகள் எவையும் பயன் தரப் போவதில்லை. மோசடித்தனமான தேர்தல் ஒன்றிற்குத் தயாராகிவிட்ட ஐ. தே. கவிடம் தேர்தலை நியாயமாகநடத்து எனக்கோருவது திருடனிடம் நீதி பற்றியும், மனச்சாட்சி பற்றிப் பேசுவதற்கு ஒப்பானதாகும்.

---

பியாக கட்சியால் நியமிக்கப் படாவிட்டால் கண்டித் தொகுதியில் போட்டியிடுவேன் எனக் கூறியுள்ளார்.

**பிரேமாவிற்கு**

தைப் பிரதிபலிக்கவில்லை என பிரேமதாசாவின் மகன் சஜீத் பிரேமதாசா குறைகூறியிருந்தமை தெரிந்ததே.

**அதி அற்புத**

செய்ய முடியாதவாறு யாழ் கடல் நீரேரியில் பிரயாணத்திற்குக் குந்தகம் ஏற்படுத்தியும், பிரயாணம் செய்யும் வேளையில் வெட்டியும், கொத்தியும், அழிவு நடவடிக்கைகளைச் செய்த வேளை மக்களைக் காக்கவும், தாய் மண்ணைக் காக்கவும் தம்மையே வெடிகுண்டாக்கி தமது சாவிற்குத் திகதியும் நேரமும் குறித்து எதிரியின் பாசறைகளுக்குள் புகுந்து, எதிரியின் கப்பல் களையும் விசைப் படகுகளையும் தகர்த்தழித்து வீரச்சாவைத் தழுவிய கரும்புலிகள், கடற்கரும்புலிகள் பதின்நான்கு பேரையும் நினைவு கூருவோம்.

வரைபடாத சித்திரங்களாயும், எழுதப்படாத சரித்திரங்களாயும், எமது வாழ்வுக்காகத் தமது வாழ்வைத் துறந்த அந்த அதி அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்திப் பூ ப்போம்: அவர்தம் தியாகங்களைப் போற்றுவோம்

எமது இல்லங்களின் வாயில்களில் இக் கரும்புலி மாவீரர்களின் உருவப்படங்களை 3.7.94 தொடக்கம் 5-7-94 வரை வைத்துச் சுடரேற்றி மலர் மாலை சூடி ஆராதிப்போம்

கரும்புலிகள் நினைவாகச் செய்யப்படும் சிரமதானங்களில் திரளாகச் சேர்ந்து, கலந்து எமது கிராமங்களின் சுத்தத்தையும், அழகையும் பேணுவோம்

கரும்புலிகளின் மகிமை பேசும் கருத்தரங்குகளில்பங்கு பற்றி கேட்டுப் போற்றுவோம்.

---

உறுப்பினர்களான ரிச்சார்ட் பத்திரான, பியசேன கமகே, றொயல் பத்மசிறி, காரியவாசம் ஆகியோரும் இம்முறையும் தேர்தல் களத்தில் இறங்குகின்றனர்.

**நயினாதீவு**

கிழமை காலை நயினாதீவு நாகபூஷணியம்மன் தேர்த் திருவிழாவுக்கு சென்ற மக்கள் மாலையில் வீடு திரும்பமுயன்றனர் எனினும் நயினாதீவுத்துறையில் இராணுவத்தினர் இரண்டு மணிநேரம் இவர்களைச் சோதனை செய்து இரவு 7.30 மணியளவில் நெடுந்தீவு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வள்ளம் நெடுந்தீவு கரையை அண்மித்தபோது, வள்ளத்தை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. வள்ளத்தில் இருந்தவர்களில் சிலர் பீதியடைந்து வள்ளத்தினுள்ளேயே படுத்துவிட்டனர். சிலர் கடலில் குதித்தனர். இதன்போது ஒருவர் மரணமானார். 8 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

இச் சம்பவம் குறித்து அரசு விசாரணை மேற்கொள்ள வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

---

முக்கிய இடங்களில் வைக்கப்பட்டுள்ள - வைக்கப்படும் கரும்புலி மாவீரர்களின் உருவப் படங்களுக்குக் கரும்புலிகள் நாளன்று காலை 9.00 மணிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் நாமும் கலந்து அஞ்சலி செலுத்திச் சிறப்பிப்போம்:

கரும்புலிகள் நாளன்று கோட்ட மட்டத்தில் நடைபெறவுள்ள கரும்புலிகள் நினைவுப் பொதுக் கூட்டத்தில் ஆயிரம், ஆயிரமாகக் கலந்து எமது எழுச்சியைக் காண்பிப்போம்: எமது விடுதலைப் பற்றைவெளிப்படுத்துவோம்: நாம் எமது போராட்டத்தில் கொண்ட உறுதியைக் காண்பிப்போம்: நாம் எமது விடுதலையை நிச்சயமாக வென்றெடுப்போம் என உறுதி எடுப்போம்:

---

48 பேரும் இதுவரை தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவில்லை. இவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் பதிவு செய்யாதவர்களின் நிலைப்பாடு தெரியவரவில்லை.

இதனால் இவ்வாறு மீள நிரப்புவது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடைப்பிடித்து வரும் கொள்கைகளை தளர்த்தி அவ்வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என துணைவேந்தர் தனது கடிதத்தில் கேட்டுள்ளார். (ச, சி)

**யாழ். பல்கலை**

களுக்கே பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கி வருகின்றது.

இந் நிலையில் இவ்வாறு தெரிவாகும் மாணவர்களுக்குள்ளும் முப்பது வீதத்தினரே தமது பெயர்களை பதிவு செய்து பல்கலைக் கழகத்தில் தமது கல்வியைத் தொடர்கின்றனர்.

இம்முறை 1993/94 கல்வியாண்டிற்கு உயிரியல் விஞ்ஞானப் பிரிவிற்கு 45 மாணவர்களை தெரிவு செய்வதற்கு அனுமதி கிடைத்தபோதும் பதினைந்து மாணவர்களே தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

இதேபோல் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் 83 பேருக்கு அனுமதி கிடைத்தபோதிலும் 35 பேர் மட்டுமே பதிவு செய்துள்ளனர்.

இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால் எமது சமுதாயத்தின் கல்வி நிலை மிக மோசமாகப் பாதிக்கும் என்பதை சம்பந்தப் பட்டவர்கள் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்களின் அளவிற்கு ஏற்பவே நிதி வழங்கப்படுகின்றது. இவ்வாறு மாணவர் தொகை வீழ்ச்சியடையும் பட்சத்தில் விரிவுரையாளர்களுக்கான சம்பளம் வழ

---

(கொழும்பு)

தன் மீது களங்கம் ஏற்படுத்தும் வகையில் சில சுவரொட்டிகளை ஆளுங்கட்சிப் பிரமுகர் ஒருவர் அச்சேற்றி தனது அறையில் வைத்திருப்பதாக திருமதி சந்திரிகா குமாரணதுங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

தேர்தலுக்காக தாம் வேட்புமனு தாக்கல் செய்ததும் இந்த கீழ்த்தரமான சுவரொட்டிகளை பொது இடங்களில் ஒட்ட இந்த அரசியல்

-சந்திரிகா

பிரமுகர் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் கூறினார். இதேசமயம் தம் மீதான களங்கமான செய்திகளை பரப்பவென 60 பாதாள உலக கிரிமினல்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் பொது இடங்களில் இவ்வாறு தம் மீதான களங்க செய்திகளை பரப்ப திட்டமிட்டுள்ளனர் எனவும் சந்திரிகா குமாரணதுங்க மேலும் தெரிவித்தார்.

---

**சூரியகந்த எலும்புக்கூடுகள்;**

## சர்வதேச வைத்திய நிபுணர் பரிசோதனை வேண்டும்

சூரியகந்த பகுதியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள், சர்வதேச வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும் என காணாமல் போனவர்களின் பெற்றோர்களின் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிறிலங்கா நிபுணர்களின் வைத்திய பரிசோதனையில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் இதனால் தாம் சர்வதேச நிபுணர்களின் பரிசோதனையை கோரியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

---

**மாவட்டத்தை**

யோர் கம்பஹா மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்துவந்தனர் இப்பொழுது அம்மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் சந்திரிகா குமாரணதுங்கா போட்டியிடுவதினால் இந்த நிலைமை தோன்றியுள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது

---

கவோ, நிர்வாகத்தை இயக்கவோ முடியாத நிலை ஏற்பட்டு பல்கலைக் கழகம் மூடப்படும். இவ்வாறு மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதி கிடைத்தும் தமது கல்வியை தொடர விரும்பாத விடத்து அவ் விடங்களுக்கு புதியவர்களை தெரிவு செய்வதற்கோ அனுமதிப்பதற்கோ பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்க மறுத்துவிடுகின்றது. இதனால் இவ் வெற்றிடங்கள் நிரப்பப்படாமலேயே இருந்து வருகின்ற நிலை ஏற்பட்டுள்ளது என்றார். (ச),(சி)

---

## தமிழ் விழா

யாழ். இந்து மகளிர் கல்லூரி தமிழ் விழா இன்று புதன் காலை 9 மணிக்கு நடைபெறும், முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் கலந்து கொள்வார்.

## வினாத்தாள்கள் வந்தடைந்தன

(யாழ்ப்பாணம்)

அரசாங்க பாடசாலைகளுக்கான கீழைத்தேய சங்கீத, நடனம் மற்றும் சித்திரக் கலை உதவி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் மற்றும் அனுமதி அட்டைகள் யாழ். கல்வித் திணைக்களம் வந்து சேர்ந்துள்ளன.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

சிந்தை தெளிந்து சீதனத்தை நிராகரிப்போம்
எந்தையர் உள்ளம் இனித்திடச் செய்வோம்

# கொழும்பில் இரு தினங்களில் 400 தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)
சென்ற வெள்ளிக்கிழமை முதல் இரண்டு தினங்களாக கொழும்பில் நடைபெற்ற சுற்றிவளைப்பின் போது சுமார் நானூறுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் இளம் பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் 'லங்கா தீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தாக்குதல் நடத்துவதற்கு இருபத்திரண்டு கரும்புலிகள் ஊடுருவியுள்ளதாக கிடைத்த தகவலை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யுத்தம் வியாபாரமாகிவிட்டது ஹமில்டன் வனசிங்கா கவலை

யுத்தத்தை ஒரு வியாபாரமாக கருதுபவர்களே இன்று உள்ளனர். எனவேதான் யுத்தம் ஒரு மந்த நிலையில் சென்றுகொண்டிருக்கிறது. என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆனந்த கல்லூரியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் பொழுது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில் யுத்தத்தை வியாபாரமாக கருதாது அதனை ஒருதியாகமாக மதித்து நாட்டின்சேவையாகஎன்றுகருதுகின்றார்களோ அன்றே இவ் யுத்தத்தை வெல்ல முடியும் என்றார்.

## ஐ. தே. க.

களுக்கு கட்சியின் சார்பில் போட்டியிட வாய்ப்புக் கிட்டாது என தெரிவிக்கப்படுகிறது

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் தெரிவுக்குழுவில், ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி ஜேசேகரா, அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீட் கொழும்பு பிரதி மேயர் கணேசலிங்கம் மற்றும் இரு மாவட்ட கட்சித் தலைவர்கள் அடங்கியுள்ளனர்

# யுத்தம் தொடர்பாய் தெளிவு அவசியம்

## மத்திய மாகாணசபை ஆளுநர்

(கொழும்பு)
யுத்தத்தில் சகல மக்களையும் ஈடுபடுத்த வேண்டும். யுத்தம் தொடர்பான தெளிவான கருத்து மேலோங்க வேண்டும். அடுத்து ஒவ்வொரு குடும்பத்தில் இருந்து ஒருவரைத் தன்னும்யுத்தத்தில் பங்குகொள்ள செய்யுமாறு சட்டம் கொணடு வரப்பட வேணடும். இவ்வாறு மத்திய மாகாண ஆளுநர் பி.சி. இம்புலான தெரிவித்துள்ளார்.

இவ்வாறு யுத்தம் தொடர்பான ஓர் தெளிவு பெற்ற நிலையில் தான் யுத்தத்தை வெல்ல முடியுமே தவிர இதனை விட்டு விட்டு எனக்கு ஆட்சியை தந்தால் இருபத்தி நான்கு மணித்தியாலத்தில் அதை செய்வேன் இதை செய்வேன் என்று கூறுவது வெறும் வெட்டி பேச்சு. யுத்தத்தை தொடர்ந்து நீடித்து நடத்திக்கொண்டு செல்வதினால் கிராமப் புறங்களைச் சேர்ந்த அப்பாவி இளைஞர்கள் தான் பலியாவதாகவும் இதனால் யுத்தம் தொடர்பாக அவர்கள் உற்சாகம் இழந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கபடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒருபுறம் யுத்தம்நடைபெறும் போது,மறுபுறம் மகிழ்ச்சி களியாட்டங்கள் விளையாட்டுப் போட்டிகள் நாட்டில் நடைபெறுவதினால் இராணுவத்தினர் சிலர் குழப்பம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிபர்களுக்கான கருத்தரங்கு

கரும்புலிகள் நினைவு நாளையிட்டு கோட்டரீதியாக நடைபெற்று வரும் கருத்தரங்குகளில் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு உடுவில் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

## சமூகவியல் ஆய்வரங்கம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக, சமூகவியல் சமூகம் ஏற்பாடு செய்துள்ள சமயத்தின் சமூகவியல் தொடர்பான ஆய்வரங்கம் இன்று மாலை 3 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நிகழவுள்ளது. சமூகவியல சிரேஷ்ட விரிவுரையாளர் என். சண்முகலிங்கனின் பொருள் அறிமுகத்தினைத் தொடர்ந்து, வண. கலாநிதி டொமினிக் ஏ. ஜோசப் அவர்கள் ''புதிய சமய குழுமங்களின் தோற்றமும், அவற்றின் சமூகப் பின்னணியும்'' எனும் பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார்.

கருத்துரையை தொடர்ந்து கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது.

## சமூகம்தரவும்

வேலையற்று இருக்கும் வடமராட்சி சுருக்கெழுத்துக்கழக உறுப்பினர்கள் அனைவரும் எதிர்வரும் 3-ம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு கழகப் பயிற்சி நிலையத்தில் கூடுமாறு கழகச் செயலாளர் கேட்டுள்ளார்.

"கணித கோட்பாடுகளும் நமது வாழ்வில் அதன் பயன்பாடுகளும்"
நிகழ்த்துபவர்:- டாக்டர் சி சிறிசற்குணராஜா அவர்கள்,
சிரேஷ்ட விரிவுரையாளர், கணிதத் துறை, யாழ். பல்கலைச் கழகம்.
காலம்:- 29-06-94 புதன்கிழமை பிற்பகல் 4.00 மணி.
இடம்:- அறிவியல் கழக மண்டபம் (இணுவில்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு.
(8680)

## விண்ணப்பங்கள் வந்தன

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க. பொ. த (சா/தர) பரீட்சைக்கான யாழ். மாவட்டப்பாடசாலைகளுக் குரிய விண்ணப்பப்படிவங்கள் யாழ். கல்வித்திணைக்களம் வந்து சேர்ந்துள்ளன.

இவ் விண்ணப்பப்படிவங்கள் நேற்று யாழ். கல்வித்திணைக்களத்தினால் சகல பாடசாலைகளுக்கும் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி அடுத்த மாதம் 18ஆம் திகதி ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## அறிவியல் வினாடி வினா

ஜூலை - 5 கரும்புலிகள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடத்தும் ''அறிவியல் வினாடி வினா'' தொடர் போட்டியில் நல்லூர் கோட்ட க. பொ. த உயர்தர பாடசாலை மாணவருக்கான போட்டி எதிர்வரும் 2-ம்திகதி காலை 9.00 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சி ஜூலை 5 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு தமிழீழ வானொலியில் ஒலிபரப்ப ஆரம்பிக்கப்படும்.

பார்வையாளருக்கான வினாப் போட்டியும் நடைபெறவுள்ளது.

யாழ். ஸ்ரீதரில்
STEVEN SPIELBERG
இயக்கிய
JURASSIC PARK
(அறிவியல் சார்ந்த திகில் படம்)
தினசரி 4, 6
சனி, ஞாயிறு 10.30, 4,6 மணி
(சி-9872)

இறைச்சி கோழி
சுத்தம் செய்தும், முட்டைகளும் எந்நேரமும் பெற்றுக்கொள்ள
சுவையருவி
கோழிப் பண்ணை
யாழ்ப்பாணம்.
(சி-9882)

# 2ஆம் ஆண்டில் நீங்கா நினைவுடன்



## மாவீரர்களுக்கான வீர வணக்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சிக் கோட்டம் பளை வட்டத்தில் 6-ம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீர வணக்க கூட்டம் இத்தாவில் பாடசாலையில் இன்று இரவு 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது-

வட்டத்தில் 6-ம் மாதங்களில் வீரச்சாவு அடைந்த மாவீரர்களுக்கான வீர வணக்கக் கூட்டம் இன்றிரவு 8-00 மணிக்கு யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளிகோயில் முன்றலில் நடைபெறவுளது-

இந் நிகழ்வுகளில் கலை

திருமலை நட்சத்திரங்களின்
மூன்றாம் ஆண்டு
நிறைவையொட்டி நடத்தப்பெறும்
11 பேர் கொண்ட
மாபெரும்
உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி



சாலையில் இன்று இரவு 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது- வலிகாமப கோட்டம்யாழ்.

...ல் நடைபெறவுள்ளது-

இந் நிகழ்வுகளில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்-

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட

## தொண்டா, அஷ்ரப்பிடம் குமார் கோரிக்கை


(கொழும்பு)

சிறுபான்மையினர் சார்பில், அமைச்சர் தொண்டமான் அல்லது முஸ்லிம காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறு திரு. குமார் பொன்னம்பலம் கேட்டுள்ளார்.

இருவரில் ஒருவர் போட்டியிடும் சந்தர்ப்பத்தில் தனது ஆதரவு போட்டியிடுபவருக்கு தருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதற்குப்பதிலளித்த அமைச்சர் தொண்டமான், ஜனாதிபதி வேட்பாளருக்கான செயல்பாடுகளை தனது வயது தடுப்பதாக கூறினார்.

முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் இதற்குப் பதிலளிக்கையில், குமார் பொன்னம்பலத்தின் வேண்டுகோளை பரிசீலித்து, பதில் தருவதாக கூறியுள்ளார்.



# மேஜர் அழகன்

(ஈழநாதம் முன்னாள் நிர்வாகப் பொறுப்பாளர்)

| | |
|---|---|
| தாயின் மடியில்: | தாயக விடிவில்: |
| 13 - 01 - 1966 | 29 - 06 - 1992 |

அன்பிற்கு எடுத்துக் காட்டாய்
அழகனே! வாழ்ந்தாய் எங்கள்
உயிரினும் மேலாய் நின்று
உதவிகள் பலவும் செய்தாய்!
ஈழநாதமெனும் நல்ல நாளிதழ் வளர்ச்சிக்காக
உன்னையே அர்ப்பணித்து உன்பெயர் நாட்டிவிட்டாய்

உன் பிரிவால் என்றும் வாடும்
தயா, குணம், ரகு, தில்லை, குமார்,
சிவா, மோகன், ஜீவன், விஜயன், பிரதீப்.

(சி-9701)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி தம்பித்துரை


புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், 655, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி பரமேஸ்வரி தம்பித்துரை நேற்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கா. குழந்தைவேலு தெய்வானைப்பிள்ளை தம்பதியின் அன்பு மகளும், பத்மநாதன் (கொழும்பு), திருமதி பா. ரஞ்சிதமலர் (ஆசிரியை யாழ். பெரியபுலம் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ப. மகேஸ்வரி. கே. பாலச்சந்திரன் (ஈழநாதம் காரியாலயம்) ஆகியோரின் மாமியாரும், சுஜேன், சாலினி, ஆர்த்தி ஆகியோரின் பேர்த்தியும், மு. சிவபாக்கியம், கு. நாராயணசுவாமி (ஆசிய அபிவிருத்தி வங்கி, மணிலா) ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 3-30 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

655, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ரஞ்சிதமலர் பாலச்சந்திரன்
(மகள்) (ஆசிரியை)

(சி-9702)



| | | |
|---|---|---|
| இடம் :- | மருத்துவபீட மைதானம், யாழ். பல்கலைக் கழகம். | |
| காலம்:- | 30 - 06 - 94 | 02 - 07 - 94 |
| | 01 - 07 - 94 | 03 - 07 - 94 |
| நேரம் :- | பிற்பகல் 2.00 மணி. | (8674) |

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.